**O.S.No. 320/2019**

**PW 1:** சந்தோஷ்பாலு தேதி 27.02.2026

வாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1ம் பிரதிவாதி மருத்துவமனை ஈரோடு மோட்டூர் ரோட்டில் அமைந்துள்ளது. 2ம் பிரதிவாதி சுமதி பத்மநாபன் கடந்த 20 வருடங்களாக பணிபுரிந்து வருகிறார் என்பது எனக்கு தெரியும். மாதம் சுமார் 60 -70 மகப்பேறு சிகிச்சைகள் அவரால் வழங்கப்படுவது தெரியுமா என்றால் தெரியும். 1ம் பிரதிவாதி மருத்துவமனையில் தான் 2ம் வாதி பிறந்தார். 2ம் வாதிக்கு தற்போது வயது 13 ஆகிறது. 13 வருடங்களுக்கு முன்பு எந்த மருத்துவமனைக்கு மகப்பேறு சிகிச்சை எடுத்து கொள்ளலாம் என்று நானும் என் மனைவியும் கலந்து ஆலோசித்து முடிவு செய்தோம் என்றால ் சரிதான். ஈரோடு சிறந்த மகப்பேறு மருத்துவமனைகளில் 1ம் பிரதிவாதியின் மருத்துவமனையும் ஒன்று என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி மருத்துவமனை குறித்து நன்றாக விசாரித்த பின்னிட்டு தான் என் மனைவியை சேர்த்தேன். பின்னிட்டு குழந்தை பிறக்கும் வரை 1ம் பிரதிவாதி மருத்துவமனையில் தான் என் மனைவி சிகிச்சை எடுத்து கொண்டார். 2ம் வாதி சுகபிரசவத்தில் பிறந்தார் என்றால் சரிதான். என் மனைவிக்கு முதல் குழந்தையும் 1ம் பிரதிவாதி மருத்துமனையில் தான் பிறந்தது. முதல் குழந்தை சுகபிரசவத்தில் பிறந்தது. அதனால் தான் 2ம் குழந்தைக்கும் அதே மருத்துமனையில் பேறுகால சிகிச்சை எடுத்து கொண்டோம். தங்கள் மனைவி மற்றும் குழந்தை இறந்ததற்கான ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்திருக்கிறேன். என் மனைவி மற்றும் குழந்தை இறந்ததற்கான காரணம் **amniotic fluid embolism** காரணத்தினால ் இறந்துவிட்டதாக மருத்துவ ஆவணங்களில் உள்ளது. இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக மருத்துவரை கலந்து ஆலோசித்தேன் என்றால் சரிதான். **embolism** என்பது எதிர்பாராத வகையில் தாயின் கருப்பையில் பனிக்குட நீர்

தாயின் இரத்த ஓட்டத்தில் கலந்து உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தி இருதயத்தை செயலிழக்கவைத்தும் மற்றும் இருதயத்தில் ரத்த கசிவு ஏற்படுத்தியும் நுரையீரல் செயல் பாட்டை நிறுத்தியும் இரத்த கசிவு மற்றும் இரத்த கட்டிகள் உருவாக்கும் என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். மேற்படி பிரச்சனை சுமார் 87% மரணத்தை ஏற்படுத்தும் என்பதையும் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். மேலே சொன்னவாறு பாதிக்கப்படும் போது உடல் நீல நிறமாக மாறும் என்று சொன்னால் சரிதான் நான் மருத்துவரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன். அதனால் இருதயம் செயலிழக்கும் என்பதையும் தெரிந்து கொண்டேன். **embolism** உள்ளதால் வாசாஆ 10 ல் கண்டுள்ள 2 மற்றும் 3 வதாக காரணத்தினாலும் இறப்பு ஏற்பட கூடும் என்பதை மருத்துவர் மூலம் தெரிந்து கொண்டேன். **Disseminated intravascular coagulation** மூலமாக இரத்தம் உறைந்து அனைத்து உறுப்புகளையும் செயலழிக்க வைக்கும் என்றால் சரிதான் மருத்துவர் மூலம் தெரிந்து கொண்டேன். உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்பதையும் தெரிந்து கொண்டேன். அது சிறுநீரகம் கல்லீரம் ஆகியவற்றை சேதப்படுத்தும் என்பதையும் தெரிந்து கொண்டேன். 3 வது காரணமாக வாசாஆ 10 ல் சொல்லப்பட்டுள்ள **Refractory metabolic acidosis with hyperkalemia** இரத்தத்தில் ஆக்ஜிசன் அளவு மற்றும் பொட்டாசியம் அளவை அதிகப்படுத்தும் என்று சொன்னால் மருத்துவர் மூலம் தெரிந்து கொண்டேன். அதனால் கிட்னி முழுவதுமாக செயலழிந்து விடும் என்பதையும் தெரிந்து கொண்டேன். நான் என் மனைவியின் பிரசவத்தின் போது 1ம் பிரதிவாதி மருத்துவமனையில் தான் இருந்தேன். என்னுடன் உறவினர்களும் இருந்தார்கள். அப்போது லேபர் வார்டில் **embolism** ஏற்பட்ட உடன் தீவிர சிகிச்சை பிரிவுக்கு என் மனைவியை மாற்றினார்கள் என்றால் ஆம் அவ்வாறு தான் மாற்றினார்கள். பின்னிட்டு சுதா மருத்துவமனையில் இருந்து ஆம்புலன்ஸ் வந்தது. டாக்டர் சுமதி பத்மநாபன் மற்றும் அவருடைய கணவர் 3ம் பிரதிவாதி டாக்டர் பத்மநாபன் மற்றும் நர்ஸ்கள் அதே ஆம்புலன்சில் என் மனைவியுடன் சுதா மருத்துமனைக்கு சென்றார்கள் என்றால் சரிதான்.

அவ்வாறு சுதா மருத்துவமனைக்கு செல்ல என்னிடம் அனுமதி பெறப்பட்டது என்றால் சரிதான்.அவ்வாறு **embolism** ஏற்பட்டால் சூப்பர் ஸ்பெசாலிட்டி மருத்துவமனைக்கு எடுத்து செல்வதாக என்னிடம் தெரிவித்தார்கள் என்றால் சரிதான். சுதா மருத்துவமனை ஆம்புலன்ஸ் வேன் வந்தவுடன் இரவு 11.40 மணிக்கு சுதா மருத்துவமனைக்கு என் மனைவியை எடுத்து சென்றார்கள் என்றால் சரிதான். சுதா மருத்துவமனையில் அங்குள்ள மருத்துவ குழுவும் ஆம்புலன்சில் சென்ற மருத்துவர்களும் என் மனைவியின் உயிரை காப்பாற்ற முயச்சி செய்தார்கள் என்றால் சரிதான். காப்பாற்ற முயன்றும் **embolism** காரணமாக என் மனைவியின் உயிரை காப்பாற்ற முடியாமல் போய்விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தார்கள் என்றால் சரிதான். நான் தற்போது 2ம் திருமணம் செய்து கொண்டேன். 2ம் மனைவிக்கும் எனக்கும் குழந்தை நாளது வரை பிறக்கவில்லை.

( வழக்கறிஞர் கேட்டுகொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)